# காய்கறிகளுக்கான விலை முன்னறிவிப்பு

## தக்காளி

தக்காளி, அதன் ஊட்டச்சத்து மதிப்பு காரணமாக மிக முக்கியமான ‘‘பாதுகாப்பு உணவுகள்’’ -ளில் ஒன்றாக கருதப்படுகிறது. தேசிய தோட்டக்கலை வாரியத்தின் மூன்றாவது முன்கூட்டிய அறிக்கையின்படி, 2017-18 ஆம் ஆண்டு இந்தியாவில் தக்காளி 7.86 லட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு 193.77 லட்சம் டன்கள் உற்பத்தியாகும் என்று அறிவித்துள்ளது. இந்தியாவின் மொத்த தக்காளி உற்பத்தியில் மத்திய பிரதேசம், ஆந்திர பிரதேசம், கர்நாடகா, தெலுடங்கான, குஜராத், மேற்கு வங்காளம் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்கள் சேர்ந்து 64 சதவீதம் பங்களிக்கின்றது. தமிழ்நாட்டில், கிருஷ்ணகிரி தருமபுரி, சேலம், திருப்பூர், தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்கள் தக்காளி உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும். தமிழ்நாட்டில் அனைத்து பருவங்களிலும் தக்காளி சாகுபடி செய்யப்படுகிறது. வர்த்த மூலங்களின்படி, கர்நாடகாவிலிருந்து வரும் தொடர் வரத்தே தக்காளியின் தற்போது விலை குறைவிற்கு காரணமாகும். ஆனால், வடகிழக்கு பருவ மழை காலங்களில் தக்காளி விலை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக கருதப்படுகிறது.

## கத்திரி

தேசிய தோட்டக்கலை வாரியத்தின் மூன்றாவது முன்கூட்டிய அறிக்கையின்படி, 2017-18 ஆம் ஆண்டு இந்தியாவில் கத்திரி 7.36 லட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு 128.26 லட்சம் டன்கள் உற்பத்தியாகும் என்று அறிவித்துள்ளது.. இந்தியாவின் மொத்த உற்பத்தியில் மேற்கு வங்காளம் , ஒடிசா, பீகார், குஜராத் மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்கள் சேர்ந்து 69 சதவீதம் பங்களிக்கின்றது. தமிழ்நாட்டில், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திண்டுக்கல், திருவண்ணாமலை மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் கத்திரி அதிகளவில் பயிரிடப்படுகிறது. வர்த்த மூலங்களின்படி, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி மற்றும் ஒட்டன்சத்திரம் ஆகிய சந்தைகளுக்கு கர்நாடகா மாநிலம் மைசூரிலிருந்து போதுமான வரத்து வந்து கொண்டிருக்கிறது.

**வெண்டை**

வெண்டை, இந்தியாவில் பயிரிடப்படும் முக்கிய காய்கறிப் பயிர்களுள் ஒன்றாகும். 2017-18-ம் ஆண்டில் 5.14 லட்சம் எக்டர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு 61.26 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில், மேற்கு வங்காளம், குஜராத், பீகார் , ஒடிசா மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்கள் சேர்ந்து 59 சதவீதம் வெண்டை உற்பத்தியில் பங்களிக்கின்றது. தமிழ்நாட்டில், சேலம் , தேனி , தர்மபுரி , திருவள்ளுர் , கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்கள் வெண்டை உற்பத்தியில் முன்னிலை வகிக்கின்றது. வர்த்த மூலங்களின்படி, சரியான மழையினால் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அதிக வரத்து காணப்படுகிறது. தமிழ்நாட்டில், தொடர் பண்டிகை மற்றும் வடகிழக்கு பருவ மழை தொடங்கியுள்ளதால் வரும் மாதங்களில் காய்கறிகளுக்கு சாதகமான விலை கிடைக்கும் என நம்பப்படுகிறது.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டு திட்டத்தின் படி கீழ் இயங்கி வரும், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டம், கடந்த 14 ஆண்டுகளாக ஒட்டன்சத்திரம் மற்றும் கோயம்புத்தூர் உழவர்சந்தைகளில் நிலவிய தக்காளி, கத்திரி மற்றும் வெண்டை விலையை சந்தை ஆய்வுகள் மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் நவம்பர் - டிசம்பர் , 2018 வரை தரமான தக்காளியின் பண்ணை விலை ரூ.17 முதல் ரூ.20,-வரை, நல்ல தரமான கத்திரி கிலோவுக்கு ரூ. 23,-முதல் ரூ.25,- ஆகவும் மற்றும் தரமான வெண்டை பண்ணை விலை ரூ.21 முதல் ரூ.23,-வரை இருக்கும். எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி- 0422-2431405

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்
காய்கறிப் பயிர்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422-6611374